வீணை

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்
தஞ்சாவூர்

TCC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 408

ஸம்ஸ்க்ருத இலக்கியங்களில் இசைக்கருவிகள்-1

வீணை

பதிப்பாசிரியர்:
வேதாந்த சிரோமணி, தமிழ் வித்வான்
என். ஸ்ரீநிவாசன்,
ஸம்ஸ்கிருத பண்டிதர் (ஓய்வு)
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்
தஞ்சாவூர்.

2015] [விலை ரூ. 110-00

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	வீணை
பதிப்பாசிரியர்	:	என். ஸ்ரீநிவாசன்
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
வெளியீட்டு எண்.	:	408
மொழி	:	சம்ஸ்க்ருதம் - தமிழ்
பதிப்பு	:	மூன்றாம் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	2015
தாள்	:	TNPL 11 கி. கி
நூல் அளவு	:	25 x 19 செ. மீ.
பக்கங்கள்	:	78
படிகள்	:	500
எழுத்து	:	12
அச்சிட்டோர்	:	ஒளி அச்சுக்கோப்பு மற்றும் காப்பி பிரிண்டர் அச்சு, சரசுவதி மகால் நூலகம்.
புத்தகக்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	இசைக்கருவி-வீணை
விலை	:	ரூ. 110 -00

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

வெளியீட்டாளர் முகவுரை

தமிழகத்திற்கு கலை மற்றும் பண்பாட்டிற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் தஞ்சைமாநகரத்தில் அமைந்து தரணி முழுமைக்கும் அறிவுச்செல்வமாகப் பயன்பட்டுக்கொண்டிருக்கும் அரும்பெரும் நிறுவனம் சரசுவதி மகால் நூலகமாகும். இந்நூலகத்தை அணி செய்கின்ற அரிய சுவடிகளில் வெளிவராத சுவடிகளை மொழிப்பண்டிதர்களைக் கொண்டு நூல்களாக சிறப்பான முறையில் பதிப்பித்து வெளியிட்டு வருகின்றது. அவ்வரிசையில் வீணை என்னும் இந்நூல் தற்போது மூன்றாம் பதிப்பாக வெளியிடப்படுகின்றது.

பாரதியார், கானத்திலே அமுதாக நிறைந்த கவிதையிலே உயர்நாடு என்று பாடினார். எனவே, இசை, கவிதை மனிதனின் வாழ்வில் இணைந்து இன்பம் ஊட்டுவன. நம் நாட்டில் இசைக்கருவிகள் தோற்கருவிகளாகவும், துளைக்கருவிகளாகவும், நரம்பிசைக் கருவிகளாகவும், உலோகக் கருவிகளாகவும் பல்வேறு கருவிகளை நம் முன்னோர்கள் கண்டுபிடித்து மக்களை மகிழ்வித்ததுடன் தாங்களும் மகிழ்வுற்றனர்.

மக்களின் பொழுதை இன்பமாக்கி, அரசர்களும், இவ்வகைக்கருவிகள் தோன்ற அவர்களுக்குத் துணைநின்றனர் எனில் மிகையில்லை. இலங்கைவேந்தன் வீணை வாசிப்பதில் வல்லவன்; வீணைக்கொடியுடையவன்; அகத்தியருக்கும் இராவணனுக்கும் வீணை வாசிப்பதில் போட்டி ஏற்பட்டு, அகத்தியர் வென்றதாகக் கூறப்படுகிறது.

இந்நூலின் பதிப்பாசிரியரான இந்நூலக முன்னாள் சம்ஸ்க்ருதப் பண்டிதர் திரு. என். ஸ்ரீநிவாசன் அவர்கள் வீணைக்கருவியைப் பற்றி வடமொழி இலக்கியங்களில் காணப்படும் செய்திகளைத் தொகுத்துத் தமிழாக்கத்துடன் தந்துள்ளார். இந்நூலில் இவர் பல்வேறு நாட்டிய நூல்களில் காணப்படும் வீணை இலக்கணங்களைத் தொகுத்து உரிய மூலச் சுலோகங்களுடன் சிறப்பாக பதிப்பித்துள்ளார். அன்னாருக்கு என் பாராட்டுக்கள்.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் (பொ.) திரு. இரா. ஜெய்னுலாப்தீன், எம்.எஸ்.ஸி., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன். M.A.,B.Lit.,M.L.I.S.Ph.D.. அவர்களுக்கும் மற்றும் நூலகப்பணியாளர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் இசை ஆராய்ச்சி மாணவர்களுக்கும், கலைஞர்களுக்கும், இசை ஆர்வலர்களுக்கும், இசை கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கும் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

தஞ்சாவூர்
28-09-2015

டாக்டர் என். சுப்பையன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

ஸ்ரீ:

முன்னுரை

நமது பாரதத் திருநாட்டுக்குப் பல்வேறு சிறப்புக்கள் இருந்தாலும், நமது தொன்நெடுங்காலமாகப் பேணிவரும் கலைகள், கலாச்சார பண்பாடுகளை உலக நாடுகள் வியந்து போற்றுகின்றன. இந்திய மண்ணின் மைந்தர்களாகத் திகழ்ந்த கல்வியறிவற்ற கலைஞர்களும், கல்வியாளர்களும், பேரரசர்களும் இக்கலைகளுக்காகவே வாழ்ந்தும், கலைஞர்களை வாழவைத்தும், கலைகளைக் கட்டிக் காத்தும் வந்துள்ளனர். இத்தகைய கலை மரபுகளில் "இசைக்கலை" சிறப்புவாய்ந்ததொரு கலையாகும். இவ்விசையின் பிரிவில் தோற்கருவிகள், நரம்பிசைக்கருவிகள், துளைக்கருவிகள், உலோகக் கருவிகளின் பயன்பாடுகளும் இந்தியத் திருநாடு முழுவதுமே வழங்கிவந்துள்ளன எனில் மிகையில்லை. இவற்றில் நரம்பிசைக் கருவிகள் என்றதொருபிரிவில் "வீணை" என்று வழங்கும் இசைக்கருவிபற்றி ஸம்ஸ்கிருத இலக்கியத்தில்—குறிப்பாக நாட்டிய சாஸ்த்ர நூல்களில் காணப்படும் கருத்துக்களை மட்டுமே இங்கு தொகுத்து ஆராயப்படுகிறது.

தந்தி வாத்தியங்கள் அனைத்தையுமே "வீணை" என்ற சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளது. வில்லால் வாசிக்கும் கருவிகளையும், மற்றும் பிற உபகரணங்களால் வாசிக்கும் கருவிகளையும் வீணை என்ற சொல்லால் குறிப்பிட்டுள்ளனர். உதாரணமாக, ராவணஹஸ்தா, பினாகீ போன்ற வீணைகளைக் குறிப்பிடலாம். இதைப் போன்றே தமிழ் மொழியில் (சங்க இலக்கியங்களிலும்) "யாழ்" என்ற சொல்லாலேயே குறிப்பிட்டுள்ளனர். உதாரணமாக வில் யாழைக் குறிப்பிடலாம். பத்துப்பாட்டினுள் பெரும்பாணாற்றுப்படை என்னும் நூலில் வில் யாழைப் பற்றியும், அதன் உறுப்புக்களைப் பற்றியும் மிகத்தெளிவுபட விளக்கியுள்ளார்.

" .. .. குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சி"

(பத்துப் 4, பெரும்பாண். செய். வரி 180 — 182)

குமிழ் மரத்தின் வளைவுள்ள கிளையை எடுத்துக்கொண்டு மரற் (மருள்)ஐக் கயிறாக (நாணாக)த் தொடுத்து மற்றொரு வில்லால் வாசிக்கும்

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

பழக்கம் உடையவர்கள் குறிஞ்சி நில மக்கள் என்பதைப் புலவன் கூறும்போது 'வில்யாழ்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்.

இதில் பயன்படும் பொருட்கள் இரண்டு. 1. குமிழங் கொம்பு. மற்றொன்று அக்கொம்பினை வளைத்துக்கட்டும் மரல்கயிறு. இவ்விரண்டு மட்டுமே. மற்ற யாழுக்குரிய உறுப்புக்களை இங்கு கூறவில்லை. வில்லாக வளைத்துக்கட்ட குமிழங் கொம்பே கோடு. இதற்குரிய நாண் 'மருள்' என்று வழங்கும் கத்தாழை (வகை) நார். இந்தக் கத்தாழையை மணிக்கயிறு போல் நன்கு திரித்து ஒரு கோட்டில் வில்லுடன் இறுக்கமாகக் கட்டி மற்றொரு கோட்டில் கட்டாமல் சுற்றி எஞ்சிய கயிரை இடக்கையில் பிடித்துக்கொள்வர். அதில் மற்றொரு வில்யாழ் கொண்டு வில் நாணில் உராய நாதம் எழும்.

இதனால் வில்யாழிற்கு ஓரேயொரு நரம்புதான் என்பதும், ஒரே கோடுதான் என்பதும் பெறப்படுகிறது. இதில் குறிஞ்சி நிலத்திற்குரிய குறிஞ்சிப்பண்ணை எப்படி வாசிக்க முடியும்? என்று ஐயுற்ற டாக்டர் வரகுண பாண்டியன் (பாணர் கைவழி எனப்படும் யாழ் நூலில்) வினவுகிறார்.

கேரள மாநிலத்திலுள்ள கள்ளிக்கோட்டைப் பகுதியில் 'பெருந்தல் மன்னா' என்ற சிற்றூருக்கருகிலுள்ள காட்டில் மாடுகளை மேய்த்துக்கொண்டு பிச்சையெடுக்கும் 'புள்ளுவர்' எனப்படும் மலைவாழ் மக்கள் தங்கள் கையில் இன்றும் வில்யாழ் ஒன்றைத் தம் கையில் வைத்திருக்கின்றனர். இந்த வில்யாழின் ஒரு கோடியில் கற்றாழைக் கயிற்றை ஒரு முனையில் கட்டி, அக்கயிற்றின் மறுமுனையை அந்த வில்லின் மறுகோடியில் கட்டாது அதில் கோத்து, வில்லின் ஒரு பக்கமாகத் தம் இடக்கையால் இழுத்துப் பிடித்துக் கொண்டு. வலக்கையில் ஒரு சிறு மூங்கில் பிளாச்சு அல்லது சில்லலைக்கொண்டு அதில் தெரிக்க அதிலிருந்து ஒலி எழுகிறது. அவர்களது இடக்கையிலுள்ள நாண்கயிற்றை இழுக்க, இழுபடுவதற்கேற்ற ஒலி பேதங்களை உண்டாக்கு கிறது இதற்குத் தக்கபடி பாடுவதாகக் குறிப்பிட்டுள்ளார் வரகுணபாண்டியர்.

இதேபோன்றதொரு அமைப்பை மணிப்பூர் மாநிலத்திலுள்ள கிராமீய இசைக்கலைஞர்கள் பீனா என்னும் பினாகி வீணையை மீட்டுவதாக அறிய முடிகிறது.

இந்த வீணையின் அமைப்புமுறையையும் சுருக்கமாக இங்கு குறிப்பிட விரும்புகிறேன். சுமார் 6 அடி உயரமுள்ள வளையும் தன்மையுள்ள மூங்கில்

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

மரத்தைக் கணுவில்லாமல் சுத்தம் செய்துகொண்டு, பால்சாம்பிராணியை உருக்கி, அதில் குதிரைவால் மயிர்களை ஒன்றாகச் சேர்த்துத் திரித்துக் கொண்டு, தந்திபோல் செய்துகொள்கின்றனர். குதிரைவால் மயிரின் கயிற்றை மூங்கிலின் அடிப்பகுதியில் நன்கு பிணித்துக்கொண்டு, இடக்கால் பாதத்தில் அடிப்பகுதியை நன்கு (குடம்போன்ற—மிதிக்கும் வசதியுள்ள பகுதியை) மிதித்துக்கொண்டு, மிகுந்துள்ள ரோமத்திரியை மூங்கிலின் மறுகோடியில் பிணிக்காமல், அதன் எஞ்சிய பகுதியை இடக்கையில் சுற்றி வளைத்துப் பிடித்துக்கொண்டு, வலக்கையால் முன்சொன்ன முறைப்படியே குதிரை ரோமத்தில் செய்த வில்லை (Bow) க்கொண்டு, வில்லின் ரோமத்தில்.தேய்க்க நாதம் எழுகிறது. இதில் ஸ்வரபேதங்களை உண்டாக்க, இடக்கையில் எஞ்சியுள்ள ரோமக்கயிற்றை இழுக்க, அதன் முடுகிய நிலையில் உராயும் தன்மையால் ஒலிபேதங்கள் ஏற்படுகின்றன. இதுவே பினாகீ வீணையின் பயன்.

வடமாநிலத்தில் வாழும் கிராமீயக் கலைஞர்கள் பயன்படுத்தும், முறையும், தென்கோடி மாநிலமான கேரளத்து மலைவாழ் மக்கள் பயன் படுத்தும் முறையும் ஏறக்குறைய ஒன்றாகவே இருக்கிறது. இதில் பயன் படுத்தும் மரமும், கயிறுமே வேறுபாடு. முறை மட்டும் ஒன்றே. இதனை எண்ணும்போது இந்திய இசை மக்களிடம் எத்தகைய ஒருமைப்பாட்டை உணர்த்துகிறது? என்று அதிசயிக்கத் தோன்றுகிறது. இதிலிருந்து சங்க காலத்தில் வாழ்ந்த வில்யாழும், பினாகி என்னும் வீணையும் காலத்தால் பழமை வாய்ந்த இசைக்கருவிகள் என்று புலப்படுகிறது.

இதைப்போலவே மற்றொரு செய்தியையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். யாழின் உறுப்பான பத்தலில் (குடத்தில்) தோலைப் பயன் படுத்தி அதனை மூடிவந்துள்ளனர் சங்ககால மக்கள். இத்தோலுக்குப் "பச்சை" என்று கூறுவர். இது பத்தலின் திறந்த வாயினை மூடித் தைக்கப் படுமுன் 'பச்சை' என்றும், தைக்கப்பட்டபின் 'போர்வை' என்றும் அந்நாளில் வழங்கப்பட்டு வந்துள்ளது. இத்தோலை துவர் ஊட்டிப் பாடம் செய்து, சிவந்த மஞ்சள் வண்ணச் சாயமிட்டு வந்துள்ளனர் என்பதை சிறுபாணாற்றுப் படையின் 225 – 226 ஆம் வரிகளில்,

"கானக் குமிழின் கனிநிறங் கடுப்ப
புகழ்வினைப் பொலிந்த பச்சையோடு" என்றும்,

பொருநராற்றுப்படையின், 5 — 9 வரிகளில்

"விளக்கழ லுருவின் விசியுறு பச்சை
எய்யா விளஞ்சூற் செய்யோ ளவ்வயிற்

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

றைது மயிரொழுகிய தோற்றம் போலப்
பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை"

என்றும் குறிப்பிடுகின்றன. இதன் வாயிலாக பத்தலில் தோலைப் போர்த்தி மூடும் வழக்கம் இருந்துள்ளது என்பது தெளிவு. பாடம் செய்யப் பட்டத் தோலை பத்தலில் பிசின் (பசை) தடவி மூடிய பின் அதன் உதடுகள் வெளியே தெரியாதிருக்கும் பொருட்டும், உறுதிக்காகவும், அழகுக்காகவும் யானையின் தந்தங்களால் செய்யப்பட்ட பூவேலைப்பாடுகளுடன் 'யாப்பு' செய்வார்கள்*.

இதைப் போலவே, வடஇந்தியாவில் இன்றும் கிராமீய மக்களால் பயன்படுத்தப்பட்டு வரும் 'ராவணஹஸ்தா' என்னும் வீணையில் பதப்படுத்தப் பட்ட தோலைப் பயன்படுத்தி வருகின்றனர். தோலைப் பயன்படுத்தும் செய்திகளை 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 'கும்பகர்ணர்' என்னும் மன்னன் தனது நூலில்

"कर्परस्योर्ध्वरन्ध्रे तु चतुरङ्गुलविस्तृते ।
शुष्कचर्मावपि हिते जीवां संस्थाप्य वैणवीम् ॥"

கர்பரஸ்யோர்த்வரந்த்ரே து சதுரங்குல விஸ்த்ருதே ।
சுஷ்கசர்மாவபி ஹிதே ஜீவாம் ஸம்ஸ்தாப்ய வைணவிம் ॥

[பொருள்: தேங்காய் கொப்பரையில் நான்கு அங்குல விஸ்திரண முள்ள காய்ந்த தோலைப் போர்த்தி, அவ்விடத்தில் 'ஜீவா' என்று சொல்லப் படும் ஜீவாளத்திற்காக (பட்டுநூலை) ப்பயன்படுத்தவேண்டும்,] என்று குறிப்பிட்டுள்ளார். (இந்நூலின் பக்கம் – 27)

மேலும், கி.மு. 200க்கும் கி.பி 400க்கும் இடைப்பட்ட காலத்தில் கலைஞர்களால் பயன்படுத்தப்பட்டு வந்ததும், அஜந்தா, நாகார்ஜுனகுண்டா போன்ற குகை ஓவியங்களில் காணப்படுவதுமான கச்சபீ என்னும் வீணை யிலும் காய்ந்த தோலை போர்த்தியுள்ளனர் (இந்த வீணை தற்கால வீணை யைப் போலில்லாமல் உருவத்தில் சிறியதாகவும் குடப்பகுதி பெரியதாகவும் காணப்படுகிறது.) இதன் குடப்பகுதியில் அழகிய தோலினால் மூடப்பட வேண்டும்** என்று குறிப்பிடுகிறார் நாராயணர் என்னும் புலவர். இப்புலவர் கி. பி. 1600க்கு முன் வாழ்ந்தவர்.

---

* பாணர் கைவழி எனப்படும் யாழ் நூல். பக். 88.

** "शिरोगर्भः पिधातव्या चर्मणा कोमलेन च"
"சிரோ கர்ப: பிதா தவ்யா சர்மணா கோமலேன ச" (இந்நூல் பக். 24)

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

இங்ஙனம் வீணைகளுக்குத் தோலைப் போர்த்திவருகின்ற வழக்கம் கோவிந்த தீக்ஷிதர் காலம் (கி. பி. 1600) வரை வந்திருக்கலாம். பதிநான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த நாராயணர் தோலைப் பயன்படுத்துவதைக் கூறியுள்ள போது 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கோவிந்த தீக்ஷிதர் தனது நூலில் குறிப்பிடவில்லை. தோலுக்குப் பதில் பலகையைப் பயன்படுத்தியுள்ளனர். கோவிந்த தீக்ஷிதரின் காலத்திலோ அல்லது பின்போதான் தற்போது நாம் காணும் வீணை ஒரு புதிய வடிவமுடன் உருவாக்கப்பட்டுள்ளது என்று அறிய முடிகிறது. இதிலிருந்து சங்க காலந்தொடங்கி 16ஆம் நூற்றாண்டுவரை மக்களிடையே புழங்கிவந்த வீணைகளில் (சில வீணைகளுக்கு) தோல் போர்த்தும் வழக்கமிருந்துள்ளது என்பது தெளிவு. இத்துடன் அத்தோலில் பெரிய துளைகளுமிடப்பட்டு வந்துள்ளன. இத்துளை ஓசையை அதிக அளவில் வெளிப்படுத்தவே ஏற்படுத்தப்பட்டிருந்தன. இதுவும் சங்ககால யாழ் தொடங்கியே உள்ள மரபாகும்.

சங்க இலக்கியங்களில் "மணி நிரைத்தன்ன வனப்பின் வாயமைத்து" (சிறுபாண் — செய்யுள் வரி 223) "எண்ணாட்டிங்கள் வடிவிற்றாகி, பண்ணா வில்லா வமைவருவறுவாய்" (பெருநா — செய்யுள் வரி 11–12) என்ற வரிகளாலும், இதனை அறியலாம். இதேபோன்றே கின்னரீ என்னும் வீணையில் பெரிய துளையிடப்பட்டிருந்தது என்பதைக் கீழே காணும் வரிகளால் அறியலாகும்.

"आरभ्य त्र्यङ्गुलात्किञ्चियावच्च चतुरङ्गुलम् । अग्रादङ्गुलमुत्सृज्य सुषिरं तत्र कल्पयेत् ॥"
(பக்கம் 12) என்றும்.

"दण्डमानं दधद्गर्भे सुषिरं पृथुलं समम्" (பக்கம் 33)

"अर्धाङ्गुलपरीणाहं विदध्यात् सुषिरं ततः । अधस्तात्तिर्यगपरं रन्ध्रं सोऽभयतो मुखम् ॥

अधस्तादूर्ध्वरन्ध्रस्य सार्धत्र्यङ्गुलके भवेत् ॥" (பக்கம் 34)

இத்தகைய அமைப்புள்ள மத்தகோகிலம், கபிலாஸிர, ஸாரங்கவீணா போன்ற பல வீணைகளில் "வறுவாய்" என்று கூறப்படும் துளைகளிடப் பெற்றிருக்கின்றன. ஆயின், தற்காலத்தில் காணப்படும் வீணைகளில் இத்தகைய பெரிய துளைகளுக்குப் பதில் சிறிய துளைகளுடன் கூடிய கண்போன்ற அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாற்றுவதற்குரிய காரணம், இந்தப் பொந்துகளில் (துளைகளில்) பூச்சிகளும், எலிகளும் நுழைய வாய்ப்புக்களுண்டு. பிற்காலத்தில் புதிய வடிவுடைய வீணைகளுக்கு இதனை மாற்றி இரண்டு கண்களைப் போன்ற அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதும் தெளிவாகிறது. இதனை திரு. ஆ. அ. வரகுணபாண்டியர் அவர்களும் சுட்டிக் காட்டியுள்ளார்.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

தேன்மெழுகின் பயன்பாடு :- சங்க இலக்கியங்களில் காணப்படும் யாழ்களில் மெழுகுச் சட்டம் (தந்திரிகரம்) பற்றிய எந்தக் குறிப்புமில்லை. ஆயின், வடஇந்தியாவில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே தேன் மெழுகைப் பயன்படுத்தியும், அதில் வெண்கலத்தாலான உலோகக் கம்பிகளைப் பதிக்கும் வழக்கமிருந்துள்ளன. ஜைன, புத்த சமயத்தவர் வாழ்ந்த காலத்திலேயே தோலுக்குப்பதில் பலகையைப் பயன்படுத்தும் அமைப்புக்களுடைய வீணைகள் தோன்றியுள்ளன. மக்கள் அவற்றைப் பயன்படுத்தியும் வந்துள்ளனர் என்பது தெளிவு. மெழுகுச்சட்டம் அமைக்கும் செய்திகளைப்பற்றி இந்தத் தொகுப்பு நூலில் பல சான்றுகள் உள்ளன. அவை வருமாறு :

"वासोमर्षीविमिश्रेषा मदनेन विधारिता ।" பக். 12

"कांस्यजा लोहजा वाऽथ गृध्रपक्षोऽस्थिजा अथ ।
चतुर्दशस्वस्थाने सारिकाः स्युश्चतुर्दश ॥" பக். 14

"श्लक्ष्णवस्त्रमषीमिश्र मदनेन विनिर्मिताः" பக். 14

"मषीमिश्रेण वस्त्रस्य विशुद्धेनाग्निना भृशम् ॥
इष्टिकाचूर्णमिश्रेण दृढार्थं मर्दितेन वा ।
मधूच्छिष्टेन संश्लिष्टाः ॥" பக். 18

ஆகவே, கோவிந்த தீக்ஷிதர் புதிய வீணையைப் படைக்கு முன்னரேயே மெழுகும், உலோகக் கம்பிகளும் வீணைகளில் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன என்பதை அறியலாம்.

வீணைக்குப் பயன்பட்ட தந்திகள் :

தற்காலத்தில் உலோகக் கம்பிகளையே பயன்படுத்தி வருகின்றனர். பல நூற்றாண்டுகளுக்கு முன் குதிரைவால் மயிர், யானைவால் மயிர் அளவுள்ள எஃகுக் கம்பிகள், பித்தளைக் கம்பிகள், ஆட்டுவால் மயிர் (கம்பளி), மற்றும் நன்கு முறுக்கிய பட்டு நூல் கயிறு போன்றவற்றைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை, கீழே காணும் சுலோகங்களால் அறியமுடிகிறது.

* "अथोमयं तत्र तन्त्रीं गजकेशसमां दृढम् ।" பக்கம் 12

"गजकेशनिभा तन्त्री निबद्धा ककुभे दृढम् ॥ பக்கம் 14

"अश्ववालाधिकेशोत्थो गुणः कोणस्य कल्प्यते ।" பக்கம் 22

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

"दशरन्ध्रेषु पश्चाच्च पट्टसूत्रविनिर्मिता: ।" பக்கம் 25

"छागवालोद्भवां मन्द्रे मध्ये चैवाथ पट्टजाम् ।" ,,

"कौशेयै: पट्टसूत्रैर्वा तन्त्रीयुग्मं प्रकल्पयेत् ।" பக்கம் 31

குதிரை வாலில் உள்ள ரோமங்களை கயிறாக (தந்தியாக)த்திரிக்கவும், உறுதியாகவும் பிரியாமலுமிருக்க பால் சாம்பிராணியைப் பயன்படுத்தி வந்துள்ளனர். பால் சாம்பிராணியை உருக்கி அதில் தந்திபோல் திரிக்கப்பட்ட ரோமத்தை, நனைத்து தந்தியாக உபயோகித்துள்ளனர். (பினாகி வீணையைக் காண்க) இதனால் ரோமத் தந்தி முடமுடப்பாகவும், சொரசொரப்பாகவும் இருக்கும். இதே முறையில் அமைக்கப்பட்ட வில்லைக் கொண்டு அதில் உராய நாதம் கிளம்பும்.

இன்று புகழுடன் விளங்கும் 'வயலின்' வாத்தியத்தை இசைக்கப் பயன் படுத்தும் வில் (Bow) வில், குதிரைவால் முடியையே பயன்படுத்தி வந்தனர். (இன்று அது செயற்கை இழைகளால் ஆக்கப்பெற்று பயன்படுத்தப்படுகிறது.) இதனை சொரசொரப்பாக்க ரோஸின் (Rosin) என்ற பால் சாம்பிராணியுடன் கூடிய பொருளைப் பயன்படுத்தி வருகின்றனர். இது பலரும் அறிந்த செய்தியேயானாலும் பால் சாம்பிராணியுடன் கூடிய குதிரைவால் ரோமத்தைப் பயன்படுத்தும் பழக்கம் இந்தியாவில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரேயே நடைமுறையில் கொண்டுவந்துள்ளனர் என்பது ஒரு அரிய செய்தியாகும்.

பயன்படுத்திய மரங்கள் :

மூங்கில் முக்கியமான இடத்தைப் பிடித்திருக்கிறது. அடுத்ததாக கருங்காலி, செஞ்சந்தனமரம், கடுக்காய் மரம், சந்தனமரம், உதும்பரம் என்னும் அத்திமரம், பூதமரம் (Terminaliabolerica), பலாமரம் போன்ற மரங்களைப் பயன்படுத்தியுள்ளனர். குறிப்பாக மிகப் பழைய வீணைகளில் மூங்கில் மட்டுமே இருந்துள்ளன. காலச்செல்லச்செல்ல அதன் நாதத்தை அதிகப்படுத்தவே குடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆரம்ப காலங்களில் சுரக்குடுக்கை, பரங்கிக்குடுக்கை, தேங்காய்க்குடுக்கை போன்றவைகளே குடங்களாகப் பயன்படுத்தியுள்ளனர். அவைகள் மிகவும் மெல்லியதாக இருந்தமையாலும், எளிதில் உடையும் தன்மையுள்ளமையாலும் மரங்களைக் குடைந்து செய்யப்பட்ட குடங்களாக அவை வளர்ச்சி பெற்றுள்ளன. இவை களை இணைப்பதற்குரிய வீணாதண்டம் (மெழுகுச்சட்டம்) மட்டும், பலகாலம்

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

மாறாமல் மூங்கிலையே பயன்படுத்தி வந்துள்ளனர். பின்னாளில்தான் அதற்கும் மரங்களைப் பயன்படுத்தி அதன்மேல் மெழுகுச்சட்டங்களையும், கோல்கள் என்னும் உலோகக் கம்பிகளையும் பொருத்திப் பயன்படுத்தி வந்துள்ளனர் என்பதையும் அறியலாகும்.

இத்தகைய அமைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு கோவிந்த தீக்ஷிதரின் காலத்திலோ, அல்லது அதற்கு முன்பின்னாகவோ இன்று காணப் படும் வீணையின் அமைப்பை ஏற்படுத்தியுள்ளனர் என்பது தெளிவு. இதிலும் மராட்டிய மன்னன் துளஜா சில மாற்றங்களைச் செய்துள்ளார். 'தான் செய்துள்ள வீணையில் அடிப்படையாகவுள்ள கூறுபாடுகளை மாற்றாமலும், மெட்டுக்களை மாற்றாமலும், 'நாதம்' அதிகமாக வெளிப்படுத்தவும். அதே சமயம் இன்னும் அழகு வாய்ந்த தோற்றத்தையும் வீணையில் செய்துள்ள தாகக்' குறிப்பிட்டுள்ளார்.

(रूपभेदं विना लोके स्वरयोजनमात्रतः ।)

ஆகவே பல்வேறு காலங்களில் கலைஞர்களும். அறிஞர்களும் ஆராய்ந்ததின் பயனாலும், கடின உழைப்பாலும் ஏற்பட்டதொரு வடிவமே இன்று காணப் படும் வீணை என்பதில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது.

இந்நூலில் காணப்படும் வீணை லட்சணங்களைக் குறிப்பிட்டுள்ள ஆசிரியர்களின் வரலாறு

சோமேஸ்வரர்

ஆறாவது சாளுக்கிய விக்ரமாதித்தன் என்ற பெயருடன் 'கல்யாண்' (மராட்டிய மாநிலம்) என்ற நகரைத் தலைமை இடமாகக் கொண்டு கி பி. 1076 — 1127 வரை ஆட்சி செய்த 'திருபுவன மல்லரின்' மகன் சோமேஸ்வரர். சோமேஸ்வரருக்கு பூலோக மல்லன் என்ற பெயருண்டு. இவர் எழுதிய நூல் மானஸோல்லாஸம் என்னும் அபிலஷிதார்த்த சிந்தாமணி. இந்த நூலில் தனது தந்தை திருபுவன மல்லன் நடத்திய போர் முறை பற்றிய செய்திகளையும் குறிப்பிட்டுள்ளார்.

சோமேஸ்வரர், தன் தந்தைக்குப்பின் கி. பி. 1127 — 1136 வரை அரசு புரிந்தார். சோமேஸ்வரரின் மகன் ஜகதேக மல்லன் என்னும் ப்ரதாபன் சோமேஸ்வரருக்குப்பின் ஆட்சி புரிந்தார். இவர்கள் மேற்குத்திசை சாளுக்கிய வம்சத்தின் (Westen Calukya dynasty) என்று வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

சோமேஸ்வரர் எழுதிய அபிலஷிதார்த்த சிந்தாமணி என்னும் நூல் ஒரு கலைக்களஞ்சியமாகத் திகழ்ந்தது. ஆயின் அது நமக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை. இவர் காலத்தில் வாழ்ந்த 'பில்ஹனன்' என்ற ஸம்ஸ்கிருதப் புலவன் எழுதியுள்ள நூலின் வாயிலாக 'இசை நூல்' எழுதியதாகவும் அதில் கீதம், வாத்யம், நிருத்தம் என்பவைகள் அபிலஷிதார்த்த சிந்தாமணியில் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். இந்த நூல் 16,000 சுலோகங்களைக் கொண்டது. என்று இசையாராய்ச்சியாளர் ஸ்ரீமான் M. ராமகிருஷ்ண கவி 'பரதகோசம்' என்னும் நூலின் முகவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

சோமேஸ்வரர் இசை மற்றும் நாட்டியத்தில் சிறந்த புலமை பெற்றவர். 'குண்டலீ' என்னும் நாட்டிய வகையை மேம்படுத்தி அதனை பொதுமக்கள், அறிஞர்கள், கலைஞர்கள் ஆகியோர் கூடியுள்ள சபையில் ஆடியும் காட்டியவர். இந்த குண்டலீ நாட்டியம் இன்றும் மராட்டிய மாநிலத்தில் ஆடி வருகின்றனர் கலைஞர்கள். தற்காலத்தில் இது கொண்டினி (gondini) என்று அழைக்கப் படுகிறது. கலையார்வத்தால் தன் மகன் ப்ரதாபனிடம் ஆட்சிப் பொருப்பை ஒப்படைத்துவிட்டு கலைக்காகவே தனது வாழ்வை அர்ப்பணித்தவர் சோமேஸ்வரர் என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

ஹரிபாலர்

இவர் தேவகிரி யாதவ குலத்தினர். ஸௌராஷ்டிர தேசத்து அரசர். கி. பி. 1312 — 1318 வரை வாழ்ந்தவராக அறியமுடிகிறது. "ஸங்கீத ஸுதாகரம்" என்ற நூலை இயற்றியுள்ளார். இவர் இந்த நூலை இயற்றக் காரணமாகக் கூறுவது சிந்திக்கத் தக்கது. "காவிரிக்கரையில் இருக்கும் ஸ்ரீரங்கத்தில் நாட்டியக் கலையை நன்கு அறிந்துள்ள நாட்டிய மகளிருக்காக இந்த "ஸங்கீத ஸுதாகர"த்தை எழுதியுள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

("श्रीरङ्गेकावेरीतीरे नाट्यविद्यावतीनां स्त्रीणां प्रयोजनमुद्दिश्य सङ्गीतसुधाकरं रचयामास")

ஹரிபாலர் "விசார சதுர்முகர்" என்ற பிருதுடன் வாழ்ந்தவர். சுல்தான்களுடன் போர் தொடுத்தபோது கி. பி. 1318ல் முபாரக் என்பவரால் கொல்லப்பட்டார் என்று வரலாற்று ஆசிரியர் திரு. எம். கிருஷ்ணமாச்சாரியார் குறிப்பிட்டுள்ளார்.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

குப்பகர்ணர்

இவர், ராஜபுத்திர பரம்பரையில் வந்தவர். இவர், கி. பி. 1449ல் 'ஸங்கீத ராஜம்' என்ற நூலையும், (Chandi) என்ற இலக்கண நூலையும், கீதகோவிந்த மஹா காவியத்திற்கு 'குறிப்புரையும்' எழுதியுள்ளார் டில்லி சுல்தான்களுடன் போரிடுவதிலேயே இவரது காலத்தின் பெரும்பகுதி கழிந்து விட்டது. இவரியற்றிய, இசையாராய்ச்சி நூலான 'ஸங்கீதராஜம்' என்ற நூலைப் பின்பற்றி எழுதிய புலவர்களில் அபினவகுப்தர், விப்ரதாஸர், அசோகர், தேவேந்திரர், மதனர், பண்டிதமண்டலி போன்றோரைக் குறிப்பிடலாம். இவரே 'பக்த மீராபாயி'யின் கணவர் என்று சில ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். கீதகோவிந்தத்தின் குறிப்புரை பற்றியும், ஸங்கீதராஜம் பற்றியும் கும்பகர்ணரின் மகனும், மகளும் கி. பி. 1480ல் கல்வெட்டின் மூலம் குறிப்பிட்டுள்ளனர்.

நாராயணதேவர்

இவர், கி. பி. 1600க்கு முன் வாழ்ந்தவராக அறிய முடிகிறது. கிமிடி (Kimidi) மண்டலத்தை அரசு புரிந்தவர். நாராயணர், இசை பற்றி பல நூல்களை இயற்றியவர். அவற்றில் சில: ஸங்கீத தாமோதரம், கோஹலீயம், ஆதிபரதம், நாட்டிய தர்ப்பணம், ஸங்கீத கௌமுதீ, ஸங்கீத ஸார: கீத ப்ரகாசிகா, மம்மடக்ருதா – ஸங்கீதரத்நமாலா, கலாங்குர ப்ரபந்தம் முதலிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

வேமபூபாலன்

இவர், கொண்டவீடு என்ற ஆந்திர நாட்டின் (ஒரு பகுதியை) ராஜமுந்திரியை அரசு செலுத்தியவர். சுமார் கி. பி. 1400ல் இவர் வாழ்ந்ததாக அறியலாம் இவர் இசையிலும், இலக்கியங்களிலும் சிறந்த புலவர். இவர் இயற்றிய நூல்களில் ஸங்கீதம், சாகித்ய சிந்தாமணி ஆகியவை புகழ் பெற்றவை. சாஹித்ய சிந்தாமணி என்ற நூலில் வாத்யம், ந்ருத்தம் என்ற பகுதியில் 6000 கிரந்தம் மட்டுமே கிடைத்துள்ளன. கீதம் என்ற பகுதி கிடைக்கவில்லை.

மன்னர் ரகுநாத நாயக்கர், மன்னர் துளஜா, வேங்கடமகி ஆகியோரைப் பற்றிய வரலாற்றுச் சுருக்கம் நூலின் உள்ளேயே குறிக்கப்பட்டுள்ளன.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

நன்றியுரை :

இந்த சிறிய நூல் பல்வேறு நாட்டிய நூல்களில் காணப்படும் வீணா லக்ஷண ங்களைத் தொகுத்து உரிய மூலச்சுலோகங்களுடன் வெளியிடவேண்டும் என்றும், அது ஆராய்ச்சியாளர்களுக்குப் பயன்படுமென்றும் கருதினேன். அதன் விளைவாகத் தோன்றியதே இந்நூல். சம்ஸ்கிருதம் தெரியாதவர்களுக்கும் இவைபற்றி அறியவேண்டும் என்று கருதி, தமிழில் சிறிய மொழியாக்கமும் செய்துள்ளேன். இது முழுமையான மொழியாக்கமில்லை. இருப்பினும், கூடியவரை அனைத்து வீணைகளின் இலக்கண — அமைப்பு முறைகளைக் கொண்டுள்ள மூலச்சுலோகங்களுடனும் தமிழாக்கத்துடனும் முதன்முதலாக சிறிய அளவில் வெளிவருகிறது. பரதகோசம் என்னும் அரிய நூலைத் தொகுத்த திரு எம். ராமகிருஷ்ண கவிக்கும், வெளியிட்ட திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நூலை இந்நூலகப் பருவ இதழில் வெளியிடுவதற்கு ஏற்றவகையில் சிறிய அளவில் தற்போது வெளிவந்தாலும் எதிர்காலத்தில் இது இன்னும் பல செய்திகளுடன் தனி நூலாக வெளியிட இறையருள் துணைநிற்கவேண்டும். இதனை நூலாக வெளியிட எனக்கு அனுமதி நல்கிய இந்நூலக இயக்குநர் முனைவர். மு. இராசாராம், இ. ஆ. ப., அவர்களுக்கும், இந்நூலக நிருவாக அலுவலரும், இலக்கியவாதியுமான திரு. சாமி. சிவஞானம், M. A., அவர்களுக்கும், பதிப்பு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன், M. A., M. L. I. S., அவர்களுக்கும், நூலக அச்சகத்துறை நண்பர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நூல் இசை ஆராய்ச்சியாளர்களுக்கும், மாணவர்களுக்கும், கலைஞர்களுக்கும் உதவியாக இருக்கும் என எண்ணுகிறேன்.

தஞ்சாவூர்
4—12—1999

என். ஸ்ரீநிவாசன்,
ஸம்ஸ்கிருத பண்டிதர்.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

எண்.	தற்காலப் பெயர்	ஸம்ஸ்க்ருதப் பெயர்	பழந்தமிழ்ப் பெயர்
1.	பிருடா - பிற்கடை	शंकुः – कीलकः	ஆணி
2.	வளைவு (யாளி முகத்துடன்)	—	வணர்
3.	மாடம்	लावुकः, कोलम्भकः	மாடகம்
4.	மேரு	मेरुः, करभः	தகைப்பு
5.	நாகபாசம்	उपनाहः	கவைக்கடை
6.	குதிரை	पट्टिका	உந்தி
7.	குடம்	ककुभः वा तुम्बः	பத்தல் — கலம்
8.	குடத்தின் மேற்பலகை	चर्मः (தோல்)	போர்வை (தோல்)
9.	ஒலிக்குரிய நுண்துளைகள்	नादरन्ध्रः वा रन्ध्रः	வறுவாய்
10.	மீட்டுத்தந்திகள்	तन्त्री	பன்மொழி நரம்பு
11.	டகாரி	प्रसेवकः	யாப்பு
12.	மெழுகுச்சட்டத்தின் அடிப்பகுதி (வீணா தண்டம்)	क्रोडः वा प्रवालः	கோடு
13.	காடிச்சக்கை அல்லது காடிப்பலகை		
14.	வெண்கலக்கம்பி (Frets)	सारिका	தந்த்ரீகரம்
15.	மேளம் (தேன் மெழுகுப்பகுதி)	कोणः	புரி நரம்புக்கோல்
		—	திவவு

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy



T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

॥ श्रीः ॥

ஸம்ஸ்க்ருத இலக்கியங்களில் இசைக்கருவிகள்

வீணை

மனிதன் தனது வாழ்க்கையில் தோன்றும் அசதி, சோர்வு, துன்பம் ஆகியவற்றை மறக்கவும், மனமகிழ்ச்சிக்காகவும் ஏற்பட்டதொரு சாதனமாக விளங்குவதே கலைகள். இத்தகைய கலைகளில் இசையும், நாட்டியமும் தொன்மைக் காலந்தொடங்கியே மனித குலம் பின்பற்றி வருகிறது. இது காலம், தேசம், மொழி கடந்து உலக ஒற்றுமைக்குரிய சாதனமாகவும் விளங்குகின்றன எனில் மிகையில்லை.

இசை என்பது இசைக்கின்ற காரணத்தால் இசை எனப்பட்டது. மனம், புத்தி, செவிப்புலன் ஆகிய மூன்றையும் ஒருநிலைப்படுத்தி இசையுடன் இசைக்கின்றது. ஆகலால் இசைக்கு மொழி என்பது தடையில்லை. மொழி தெரிந்தால் பாடுகின்ற பாடலின் பொருட்சுவையையும் அறிந்து மகிழலாம் என்பது மட்டுமே. குயில் எந்த மொழியில் கூவுகிறது? அதன் கூவும் சத்தம் காதுகளுக்கும் மனத்திற்கும் இன்பந்தரவில்லையா? புரியாத – தெரியாத மொழியில் பாடுகின்ற பாட்டை வானொலியில் கேட்டு மகிழ்கிறோமே! ஆகவே, இசை என்பது அவனவனின் சுவையைப் பொருத்தே அனுபவிக்கப் படுகிறது. மேலும் குழந்தையைத் தூளியிலிட்டுத் தாலாட்டும் தாயின் இனிய குரலையோ அல்லது அவள் பாடும் மொழிச் சொல்லையோ கேட்டு குழந்தை தூங்குவதில்லை. ஆனால் ஏதோவொரு சீரான ஒலிகளின் வரிசையைச் செவிமடுத்து அதன் மூலம் அதன் மனம் அமைதியடைந்து அந்த அமைதியில் தூங்கிவிடுகிறது. ஆகவே, இசையென்பது சீரான ஒலி அல்லது ஓசையின் வரிசையே. அந்த ஒலி வரிசையே நம் மனவோட்டத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றலுள்ளது என்பது தெளிவு. இத்தகைய ஒலியை நமது முன்னோர்கள் ஒழுங்குபடுத்தியுள்ளனர். இதனை ஏழு சுரங்களாக வகைப்படுத்தியுள்ளனர். இந்த சுரங்களில் ஸ - ப என்ற சுரங்களைத் தவிர மற்ற ரி - க - ம - த - நி என்ற ஐந்து சுரங்களும் இரண்டு சுரங்களாக ஒலிக்கும் தன்மையுடையன. இதனை சுத்த ரிஷபம், சதுஸ்ருதி ரிஷபம் என்று பெயர் கொடுத்து ரி என்னும் 'ரிஷப ஸ்வரம்' இரண்டு வகை. இதைப் போல ஏனைய சுரங்களும் இரண்டு இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. இதை இசைநூல் வல்லார் மூலம்

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

அறிந்துகொள்ளவேண்டியது. இதனை விவரிப்பது இங்கு நோக்கமில்லை. ஆக, இவற்றின் வேறுபாடுகளைக் கொண்டு 72 மேளகர்த்தா ராகங்கள் தோன்றி ஆயிரக்கணக்கான ராகங்கள் தோன்றின. தோன்றியும் வருகின்றன.

இத்தகைய ராகங்களைச் சீராக உணரவேண்டுமாயின் 'வீணை' என்னும் இசைக் கருவியே உறுதுணையாக உள்ளது. இத்தகு சிறப்புமிக்க வீணை பல்வேறு காலங்களில் தோன்றி மக்களிடையே பிரபலமாகத் திகழ்ந்து அதிலிருந்து புதிய புதிய கண்டுபிடிப்புக்களால் பழமையான வீணைகள் மறைந்துவிட்டன.

வீணைகளின் பலவற்றின் பெயர்கள் இதிகாச, புராண, சமஸ்கிருத இலக்கியங்களிலும், ஆகமங்கள், நாடகங்கள் மற்றும் இசை இலக்கண நூல்கள் ஆகியவற்றில் காணப்படுகின்றன. சில வீணைகளுக்கு இலக்கணங்கள் காணப்பட்டாலும் அவற்றின் அளவு வகைகளை இன்றும் உறுதியாகக் கூற முடியாமலுமிருக்கின்றன. சில வீணைகள் சிற்பங்களாகவும், சித்திரங்களாகவும் திகழ்கின்றன. ஆயின் அது எந்த வகையான வீணை என்று உறுதி படுத்த முடியாமலும் இருக்கின்றன.

மேலும், இந்தியாவிற்கு வாணிகம் செய்ய வந்தவர்கள், இத்தகைய வீணைக் கருவியைக் கண்டு அவற்றிலெழுந்த ஒலியில் காதல்கொண்டு தங்களுடைய நாடுகளுக்கும் கொண்டு சென்றுள்ளனர் என்று இசையாராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இத்தகைய வீணைகள் நாளடைவில் அங்கு வளர்ச்சி பெற்று புதிய பரிணாமத்துடனும், புதிய பெயருடனும் இன்றும் விளங்குகின்றன எனில் மிகையில்லை. இத்தகைய வாத்ய வகையில் 'மேண்டிலின்' என்பதும் ஒன்று. இதைப் போலவே சரஸ்வதிதேவியின் வீணையின் பெயர் கச்சபி வீணை. இதே பெயரில் பிலிபைன்ஸ் (Philipines) நாட்டில் கட்ஜ்யாபி (Kadjyapi) என்ற பெயரில் இசைக் கருவியொன்று வழங்கிவருகின்றது.[1] ஆயின் இத்தகைய வீணை நம்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கும் சென்றுவிட்டன. நம் நாட்டில் இது மறைந்தேவிட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சிவபெருமானின் பல திருக்கோலங்களில் 'வீணாதரர்' என்றதுமொன்று. 'பிரலயம்' என்று கூறும் யுகமுடிவில் இவ்வுலகம் முற்றும் அழிந்து விடும். அப்போது உலகம் நீரால் மூழ்கியிருக்குமாம். இந்நிலையில் சிவபெருமான் மீண்டும் உலகைத் தோற்றுவிக்க எண்ணங்கொண்டு வீணையைக் கையில் கொண்டு அதனை இசைத்து உலகை 'நாதத்தால்' உருவாக்குகின்றார் என்று புராணங்கள் கூறும். இக்கருத்தை திருநாவுக்கரசு சுவாமிகளும்

---

1. T இசை உலகம் ... [illegible]

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

"பெருங்கடல் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும் போய்
இருங்கடன் மூடி இறக்கும் இறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபர முங்கொண்டு கங்காளராய்
வருங்கடல் மீள நின்றெம் மிறை நல்வீணை வாசிக்குமே"

என்ற தேவாரத்தால் கூறுகிறார். இத்தகைய திருக்கோலத்திலுள்ள வீணைக்கு 'லம்பீ' என்ற பெயராகும். இந்த வீணை குறித்த இலக்கணங்கள் நூல்களில் காணப்பெறவில்லை.

இதுபோல தெய்வங்களில் சில மூர்த்தங்கள் வீணை வாசிப்பார்கள் என்றும் புராணங்களில் காணப்படுகின்றன. உதாரணமாக சரஸ்வதிதேவியின் வீணையின் பெயர் கச்சபி. நாரத முனிவரின் வீணையின் பெயர் மஹதீ. விஸ்வாவஸுவின் வீணையின் பெயர் ப்ருஹதீ. தும்புருவின் வீணைக்கு கலாவதீ. சிவகணங்களின் வீணைக்கு ப்ரபாவதி என்றெல்லாம் பல வீணைகளின் பெயர்கள் காணப்பட்டாலும் அவற்றின் இலக்கணமோ உருவமோ காணவில்லை. ஆயின் கச்சபீ, மஹதீ போன்ற வீணைகளின் இலக்கணங்கள் இருக்கின்றன.

பொதுவாக, சமஸ்கிருத இலக்கியங்களிலும், நாட்டிய சாஸ்த்ர நூல்களிலும் பல்வேறு பெயர்கள் அமைப்பு, முறைகள், அவற்றிற்குரிய தந்திகளின் எண்ணிக்கை, அளவுகள் ஆகிய செய்திகள் கிடைக்கின்றன. இத்தகைய வீணைகள் காலந்தோறும் பல மாற்றங்களைப் பெற்றும், அதனால் அவற்றின் புதுப்புதுப் பெயர்களைப் பெற்றும் திகழ்ந்திருக்கின்றன. உதாரணமாக பல்லவ மன்னன் மஹேந்திரவர்மன் (கி.பி. 700—750) இசை, இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவன். இம்மன்னன் கண்டுபிடித்துள்ள வீணைக்குப் பரிவாதினி என்னும் பெயர் என்று கல்வெட்டுக்கள் மூலம் விளங்குகின்றது. விபஞ்சி என்னும் வீணைக்கு நான்கு தந்திகள். பரிவாதினி வீணைக்கு 7 தந்திகள். அதாவது தாளத்திற்குரிய ஸாரிணீ தந்திகள் மூன்று அதிகம். ஆக 7 தந்திகள் என்று அறியமுடிகிறது. இதைப் போலவே தஞ்சையை அரசோச்சிய ரகுநாத நாயக்க மன்னன், மராட்டிய மன்னன் துளஜா ஆகியோரும் அவரவர்களின் ஆட்சிக்காலங்களில் வீணையைப் படைத்துள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆக, "வீணை" காலத்தால் சிற்சில மாற்றங்கள் பெற்று அந்தக் காலங்களில் புதிய வீணைக்குப் பல பெயர்களையும் பெற்றுவந்துள்ளன என்பது தெளிவு.

"வீணை" என்ற சொல்லும், அக்கருவிக்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயர்களும் காரணப் பெயர்களாகவே அமைந்துள்ளன. வீணையின் நாதம்—ஒலி தனித்ததொரு தன்மை படைத்தது. இத்தன்மையையுடைய ஒலியை எழுப்புவதால் அக்கருவிக்கு "வீணை" என்ற பெயர் உண்டாயிற்று. (वाद्यतेति वीणा । 'वा गतौ') இக்கருவியிலிருந்து எழும் ஒலி அந்தந்த ஸ்வரங்களின்

CC-0. Saraswati Mahal Series Digitized by Sri Muthulakshmi Research Academy

சரியான தூல்லியமான ஒலியை எழுப்பும். அபஸ்வரங்கள் கூட மிகத்தெளிவாகக் காட்டிவிடும், இதன் காரணமாகவும் இக்கருவிக்கு வீணை என்று பெயர் உண்டாயிற்று என்று அமரகோசத்தின் உரையாசிரியர் கூறுகிறார்.

(वेदि जायते स्वरोऽस्यामिति वीणा । "वी गतिव्याप्ति प्रजनकान्त्य सनखादनेषु ।")

இதன் காரணமாகவே, கர்நாடக சங்கீதத்தில் சாகித்யங்களுக்கு ஸ்வரப்படுத்த இன்றளவும் வீணையையே அதிகமாகப் பயன்படுத்துகின்றனர் முதுபெரும் இசை வித்வான்கள்.

வீணை என்பது பொதுப்பெயர். மற்றபடி பரிவாதினீ, வல்லகீ, ராவணஹஸ்தா போன்ற பெயர்கள் சிறப்புப் பெயர்கள். இத்தகைய வீணைகள் சமஸ்கிருத இலக்கியங்களில் ஏறக்குறைய 42 வகைப்பட்ட வீணைகள் காணப்படுகின்றன. அவை :—

ப்ரும்ம வீணா	(ब्रह्मवीणा)	அம்பிகா	(अम्बिका)
கைலாச ,,	(कैलास वीणा)	பாண வீணா	(बाण वीणा)
ஸாரங்க ,,	(सारङ्गवीणा)	காஸ்யப ,,	(काश्यप वीणा)
கூர்ம ,,	(कूर्म वीणा)	ஸ்வயம்பவ ,,	(स्वयम्भववीणा)
ஆகாச ,,	(आकाश वीणा)	புஜங்க ,,	(भुजङ्गवीणा)
மார்க ,,	(मार्ग वीणा)	போஜ ,,	(भोजवीणा)
ராவண ,,	(रावण वीणा)	த்ரிசரீ ,,	(त्रिशरी वीणा)
கின்னரீ ,,	(किन्नरी वीणा)	ஸரஸ்வதீ ,,	(सरस्वती वीणा)
லகு கின்னரீ ,,	(लघु किन्नरीवीणा)	மௌலீ ,,	(मौलीवीणा)
ராவணஹஸ்தா	(रावणहस्था)	மனோஹரதா ,,	(मनोहरता वीणा)
விபஞ்சீ வீணா	(विपञ्ची वीणा)	கணநாத ,,	(गणनाथवीणा)
பரிவாதினீ ,,	(परिवादिनीवीणा)	கௌமார ,,	(कौमारवीणा)
ஸ்வரமண்டலீ	(स्वरमण्डली)	சைத்ரிகா ,,	(चैत्रिका वीणा)
கோஷவதீ	(घोषवती)	நாட்யநாகரிகா	(नाट्यनागरिका)
ஔதும்பரீ	(औदुम्बरी)	கும்பிகா வீணா	(कुम्भिका वीणा)
கச்சபீ	(कच्छपी)	காஸாரீ ,,	(कासारी वीणा)
வல்லகீ	(वल्लकी)	தந்த்ரீ ஸாகர,	(तन्त्रीसागर:)
பினாகீ	(पिनाकी)	அம்புஜ வீணா	(अम्बुज वीणा)
நகுலா	(नकुला)	காந்தர்வ ,,	(गान्धर्व वीणा)
விநோத்தமா	(विनोत्तमा)	பத்ம ,,	(पद्मवीणा)
கௌரீ	(गौरी)	துலஜா ,,	(तुलजा वीणा)

போன்று இன்னும் பலவித வீணைகள் கூறப்பெற்றுள்ளன.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

நமது இதிகாசங்களான ராமாயணம், மஹாபாரதம் ஆகியவற்றில் வீணையைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ராவணனின் கொடிக்கு 'வீணை'யே அடையாளமாக இருந்தது என்றும், அவன் வீணை வாசிப்பதில் வல்லவன் என்றும், ராவணனின் அந்தப்புரத்தில் வசிக்கும் பெண்கள் இரவு முழுதும் வீணை வாசித்துக் களைத்து அந்த வீணையிலேயே சாய்ந்து உறங்கினர் என்பது போன்ற செய்திகளை வால்மீகி ராமாயணத்தில் காணலாம்.

மஹாபாரதம் விராட பருவத்தில் அர்ச்சுனன் பிருகன்னளையாக (பேடியாக) இருந்து நாட்டியம், வீணை முதலியவற்றை விராடன் மகள் உத்தரைக்குக் கற்பித்தான் என்பதும். இதிலிருந்து அர்ச்சுனன் வீணை வாசிப்பதில் வல்லவன் என்பதும் புலப்படுகிறது. மேலும். இந்த வீணை 7 தந்திகளையுடையதாக (सप्त तन्त्री ग्रथिता योगा) இருந்தது என்றும் அறிய முடிகிறது.

ஆதலால் இதிகாச காலத்திற்கு முன்னரேயே வீணையைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன, ஆயின் பரதரின் நாட்டிய சாஸ்திரத்திற்குப் பின்வந்த நூல்களில் வீணையைப் பற்றியும், அவற்றின் பெயர்கள், அமைப்பு முறைகள், அளவுகள் ஆகிய பல செய்திகளை அறிய முடிகின்றன. இத்தகைய நூல்களில் ஒருசில வீணையின் பெயர்கள் மட்டுமே குறிப்பிடப்பெற்றுள்ளதே தவிர அவற்றின் அமைப்பு முறைகளை விளக்கவில்லை. காரணம் இத்தகைய வீணைகள் நூலாசிரியர்களின் காலத்திலேயே வழக்கொழிந்து போயிருக்கக் கூடும் என்றும் கருதமுடிகிறது. ஆனால் ஒருசில வீணைகளின் பெயர்களும் அவற்றின் அமைப்பு முறைகளும் பரதருக்குப் பின்வந்த நூலாசிரியர்களால் தொடர்ந்து குறிப்பிட்டிருப்பதால் அத்தகைய வீணைகள் மட்டுமே பல நூற்றாண்டுகளாகக் கலைஞர்கள் கையாண்டு வந்துள்ளனர் என்றும் கருத முடிகின்றது. உதாரணமாக மஹாபாரதத்தில் வீணைக்கு ஏழு தந்திகள் (நரம்புகள்) கொண்டது' என்று குறிப்பிட்டிருப்பதைப் போலவே இன்றும் வீணைக்கு ஏழு தந்திகளே இருக்கின்றன என்பதும் சிந்திக்கத்தக்கது. ஆகவே பல நூற்றாண்டுகளாகவே நமது வீணையின் அடிப்படையான அமைப்பு மாற்றம் பெறவில்லை. ஆயினும் வீணையின் பழைமையிலிருந்து ஒருசில மாற்றங்கள். அதற்குப் பயன்படுத்தும் மரங்கள், வீணா தண்டம், தந்திகள் அவற்றின் அமைப்பு முறைகள் மட்டுமே மாற்றப் பெற்று அவற்றிற்குச் சிறப்புப் பெயர்களும கொடுக்கப் பெற்றுள்ளன என்பதை அறியமுடிகிறது.

மேலும், தோற்கருவிகள், நரம்பிசைக் கருவிகள், துளைக் கருவிகள் என்று பொதுப்பெயராகத் தமிழில் இசைக் கருவிகளைக் குறிப்பிடுவதைப்

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

போலவே ஸம்ஸ்கிருத மொழியில் ஆனத்தம் (आनद्धम्) ததம் (ततम्) ஸுஷிரம் (सुषिरं) கனம் (घनम्) என்ற பெயர்களால் அழைக்கப்பெற்றுள்ளன. இதனை அமரகோசம் இயற்றிய அமரசிம்மன் குறிப்பிட்டுள்ளார். ஆனத்தம் என்ற பெயரால் தோற்கருவிகளையும், ததம் என்ற பெயரால் நரம்பிசைக் கருவிகளையும், ஸுஷிரம் என்ற பெயரால் துளைக் கருவிகளையும், கனம் (Ghanam) என்ற பெயரால் உலோகக் கருவிகளையும் நம் முன்னோர்கள் குறிப்பிட்டுள்ளனர் என்று அறிபலாகும்.[1] இதில் மூல சுலோகத்தில் 'ஆதி' என்ற சொல்லால் பிற வாத்யங்களையும் கொள்ளவேண்டும். உதாரணமாக கின்னரி, ஸைரந்த்ரி, ராவணஹஸ்தம் முதலிய வாத்திய வகைகளைக் கொள்ள வேண்டும் என்று அமரகோச உரையான 'லிங்காபட்டீயம்' குறிப்பிடுகின்றது. இத்தகைய வீணைகளின் பெயர்களையும் அதன் விளக்கங்களையும் இனி காண்போம்.

ப்ரும்ம வீணை (ब्रह्मवीणा)

இதனை தற்காலத்தில் ''துந்தினா' என்று அமைப்பர். இதற்கு ஒரு தந்தி மட்டுமே: தற்காலத்தில் பரங்கிக் குடுக்கை அல்லது சுரைக்குடுக்கையின் மையத்தில் துளையிட்டு சுமார் 2 அல்லது 2½ அடி நீளத்தில் மூங்கில் மரத் துண்டின் ஒரு நுணியில் குடுக்கையைப் பொருத்தி, மற்றொரு நுணியில் தந்தி சுற்றும் சங்குவை ஸ்தாபித்து (பிருடாவைப் பதித்து) அதில் கம்பியைப் பொருத்தி மீட்ட நாதம் கிளம்பும் இதில் சுருதியும், தாளமும் கிடைக்கும். இது கிராமீய மக்களும் பரதேசிகளும் பயன்படுத்திவருகின்றனர். இது குறிதது ஸம்ஸ்க்ருத இலக்கியங்களில் காணப்படுவதாவது.

கருங்காலி மரத்தால் செய்யப்பெற்ற தண்டத்தில் 12 அங்குலம் (தற்கால அளவுமுறை இல்லை) நீளமும்; அரை அங்குல பருமனும் கொண்ட நீண்ட (மரக்கம்பில்) வீணா தண்டத்தில் அகன்ற மரக்குடத்தைப் பொருத்தி அதில் உலோகக் கம்பியை இணைத்து வலக்கை ஆட்காட்டி விரலால் மீட்ட நாதம் எழும். இந்த வீணை பிரம்ம வீணா என்று அழைக்கப்படுகிறது.

ब्रह्मवीणा

इदानीं ब्रह्मवीणायाः स्वरूपमभिधीयते ।
दण्डः खदिरनिर्वृत्तः षड्वितस्तिमितो भवेत् ॥

---

1 ततं वीणादिकं वाद्यमानद्धं मुरजादिकम् ।
वंशादिकं तु सुषिरं कांस्यतालादिकं घनम् ॥

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

द्वादशाङ्गुळमात्रोऽस्याः परिणाहः प्रकीर्तितः ।
सार्धाङ्गुलप्रमाणेन छिद्रमान्तरमस्य तु ॥

सार्धां वितस्तिं त्यक्त्वाग्रचं अधस्तात् छिद्रमोर्मिथः ।
कृत्वा दण्डमहीनाङ्गं वीणादण्डानुरूपतः ॥

छिद्रं विरचयेदत्र ततस्तुम्बं सरन्ध्रकम् ।
षष्ठ्यंगुलपरिणाहं स्नायुपाशेन बन्धयेत् ॥

दैर्घ्याद्दष्टाङ्गुलमितो विस्ताराच्चतुरङ्गुलः ।
अधस्तात्ककुभः कार्यस्ततो त्र्यङ्गुलविस्तृताम् ॥

चतुरङ्गुलदीर्घां च कूर्मपृष्ठोपमाकृतिम् ।
पत्रिकां लोहविहितामस्योपरि निधापयेत् ॥

दृढं निवेशनीयोऽस्या रन्ध्रे ककुभशङ्कुकः ।
तन्त्रीपत्रिकयोर्मध्ये स्थाप्या स्याद्वेणुजीविका ॥

रन्ध्रं विहाय ककुभे ततस्तन्त्र्याः प्रवेशयेत् ।
अग्रमेकं ततोऽन्यत्तु तुम्बस्योपरि निश्चलम् ॥

नागबन्धं प्रमाणेन बध्नीयात्स्थानकद्वये ।
तुम्बस्याधस्तन भागे दोरीं गाढं निवेशयेत् ॥

एकतन्त्रीयुता वीणा ब्रह्मवीणेति वर्ण्यते ।
पातकं क्षपयत्येषा दर्शनात् स्पर्शनादपि ॥

